விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஆண்டு சித்திரை மீ 21-ம் உ | செவ்வாய்க்கிழமை | (03 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 06 | ஓசை 44


## எயிட்ஸ் நோயாளிக்கு குழந்தை பிறந்தது

(கொழும்பு)

எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டு காசில் வீதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் நேற்று முன்தினம் காலை 6·25 மணிஅளவில் ஆண்குழந்தை ஒன்றுக்குத் தாயானார்.

இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தது இதுதான் முதற் தடவையாம்.

தாயும் பிள்ளையும் சுகமாக இருக்கிறார்கள் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்கு ஆசிய நாடொன்றில் தொழில் புரிந்து நாடு திரும்பிய இப்பெண் சென்ற மார்ச் மாதம் 19-ஆம் திகதியிலி...... ...

(6-ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாவை சந்திக்க பிரேமதாசா ஆர்வம் உயர் குழு ஆலோசனை



(கொழும்பு)

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்திப்பதற்கு இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மிக ஆவலாக இருப்பதாகவும் இப்படி ஒரு சந்திப்புக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும்படி தமது உயர்மட்ட அரசியல் ஆலோசகர்களை அவர் பணித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி பிரேமதாசாவும் சந்தித்துப் பேசுவதற்கான சூழ்நிலையையும், சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துவது பற்றி ஜனாதிபதியின் உயர் மட்ட அரசியல் குழு ஆலோசனை நடாத்தி வருவதாகவும் அறியப்படுகிறது. காட்டுக்குள் சென்றாவது பிரபாகரனைச் சந்தித்துப் பேசத் தயார் என்று ஜனாதிபதி பிரேமதாசா முன்னர் பகிரங்கமாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் யாழ். நகரில் உள்ளூர்ப் பத்திரிகையாளர்களை சந்தித்து அளித்த பேட்டி விபரம் நேற்றுக் கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ், ஆங்கிலத் தினசரிகளில் முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்திருந்த செய்திகளைத் தமிழ், ஆங்கிலம் தெரியாதவர்கள் கூட நேற்று ஆவலுடன் வாங்கிப் பார்த்ததைக் காணக்கூடியதாக இருந்தது.



## புதிய கிராம சேவகர் பிரிவுகளால் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கிராமசேவகர்கள் இடமாற்றமும் புதிய பகுதிகளின் பிரிவுகளும் அண்மையில் யாழ் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டன.

ஆனால் பொதுமக்கள் இதன் விபரம் தெரியாது தமது கிராம சேவகர்களைத் தேடி அலைகின்றனர். சில கிராமசேவகர்களிடம் போனால்எனதுபகுதியில்லை, அந்த விதானையார் தான் பொறுப்பு என்று கூறுவதால் இவ்வாறு அலைகின்றனர்.

அத்துடன் புதிய கிராம

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு ஈரோஸ் எம்.பி.யாக பொன்னுத்துரை நியமனம்

(மட்டக்களப்பு)

ஈழவர் ஜனநாயக முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக திரு. பொன்னுத்துரை சுகுமார் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்படவுள்ளார்.

திரு. கனகரெட்ணம் வரதராஜன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பாராளுமன்றம் செல்லாமல் இராஜினாமா செய்திருந்தார்.

இவருக்கு அடுத்த இடம் திரு. பொ. சுகுமார் விருப்பத் தெரிவில் இடம் பெற்றுள்ளார் என்பது தெரிந்ததே.

(37)

## நீரழிவு நோய் ஊசிமருந்து திடீர் விலையேற்றம்!

(கொழும்பு)

நீரழிவு நோயாளர் பயன்படுத்தும் இன்சுலின் திடீரென விலையேறியதால் நீரழிவு நோயாளர் மிகவும் கஷ்டப்படுகிறார்களாம்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ரூபா 297 விற்ற இன்சுலின் ஊசி மருந்துப் புட்டி இன்று ரூபா 397க்கு மருந்துக் கடைகளில் விற்பனையாகிறது. இரண்டு மாதங்களுக்கிடையில் ரூபா 100 விலையேற்றம் நீரிழிவு நோயாளரைப் பெரிதும் பாதித்துள்ளது.

இலங்கை ரூபாவின் மதிப்புக் குறைந்ததுதான் இந்தத் திடீர் விலையேற்றத்துக்கான முக்கிய காரணம் என்று வெளிநாடுகளிலிருந்து பெருமளவில் இன்சுலின் இறக்குமதி செய்யும் வர்த்தகர் ஒருவர் தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதி-

## கட்டடத் திணைக்கள ஊழியர்களுக்கு சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவு, கிளிநொச்சி கட்டிடத் திணைக்கள ஊழியர்கள் மூன்று மாத கால மாதச் சம்பளம் வழங்கப்படாத நிலையில் அவதியுற்று வருகின்றனர்.

மத்திய அரசு கட்டிடத் திணைக்களம் வீடமைப்புத் திணைக்களங்களிலிருந்து மாகாண அரசுக்கு பாற்றம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப் படைக்கு உணவு வழங்கிய அதிகாரி கைது

கொழும்பு

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினருக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருள்களை மோசடி செய்ததாகக் கூறப்படும் இந்திய மேஜர் ஜெனரல் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இந்திய அமைதி காக்கும் படை வீரர்களுக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்த உண

## லொறி குடைசாய்ந்ததில் ஒருவர் பலி, இருவர் காயம்

(வவுனியா)

கொழும்பிலிருந்து புறப்பட்டுவந்த லொறி றம்பால பகுதிக்கும் அனுராதபுரத்திற்குமிடையில் குடை சாய்ந்ததில் அதை ஓட்டிவந்த சாரதி ஸ்தலத்திலேயே பலியானார். இச் சம்பவம் (29.3.90) வியாழக் கிழமை இடம்பெற்றது.

லொறியில் பயணம் செய்த கணவனும் மனைவியும் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

அருமை நாயகம் என்பவரே இந்த லொறியின் உரிமையாளர் அவர் என்றும்ராசலட்சுமி என்ற தனது மனைவியுடன் லொறியில் வந்து கொண்டிருந்தபோதே இது நடந்தது.

பலியான சாரதியின் பெயர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி தபால் சேவையை

நல்லூர்

## பிரதேச சபை சட்டவிரோத மின்பாவனையை தடுக்கமுயற்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபையி

## வடபகுதி தபால் சேவையை துரிதகதியில் நடத்த முயற்சி

(கொழும்பு)
கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமான தபால் சேவை இன்று முதல் துரித கதியில் நடைபெறவுள்ளன. 1983 க்கு முன்னர் நடைபெற்றதுபோல (ரீ. பி. ஓ) தபால் தரம்பிரிக்கும் ரயில் பெட்டி இன்றுமுதல் இணைக்கப்படுகிறது.

இதனால் யாழ்ப்பாணத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

...பட்டிருந்த உணவுப் பொருள் விநியோகத்தில் மோசடி செய்ததாகக் குற்றம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீதி மீண்டும் திறக்கப்பட்டது

(தீவுப்பகுதி)
கடந்த நான்கு வருடங்களாக பொதுமக்களின் பாவனைக்காக தடை செய்யப்பட்டிருந்த நயினாதீவு கடற்படை முகாம் முன்பாக உள்ள நயினாதீவு பிரதான வீதி மக்களின் பாவனைக்காக தற்போது திறந்து விடப்பட்டுள்ளது. (15)

## யாழ். மட்டுநகர் இரவு பஸ் சேவை ஆரம்பம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு-பொலநறுவ வீதி புனாவை இராணுவ முகாம் வழியாக இரவில் வாகன போக்குவரத்துக்கு விதிக்கபட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுளளது.

இந்தடை நீக்கப்பட்டதையடுத்து கொழும்பு, யாழ்ப்பாணம் இரவு இ. போ. ச, தனியார் பஸ் சேவைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (37)

## உடுப்பிட்டி கிராமிய வங்கியில் 35000 ரூபா மோசடி

(யாழ்ப்பாணம்)
உடுப்பிட்டி கிராமிய வங்கிக்கிளையில் குறிப்பிட்ட ஒரு நபர் இறந்துவிட்டதாக போலி ஆதாரங்கள் காட்டப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுற்று நிருபம் வந்தும் செயற்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)
அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகஸ்தர்கள் சிங்கள மொழிப் பாடம் சித்தியடையாத போதிலும் அவர்களை சேவையில் உறுதிப் படுத்தப்படலாம் என அண்மையில் சுற்று நிருபம் ஒன்று யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இச்சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டும் யாழ்ப்பாண செயலகத்தில் சில உத்தியோகஸ்தர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்படாது இருந்தனர்.

தற்போது யாழ். செயலக நிர்வாக அதிகாரி இன்னும் சரியாக ஒரு கிழமையளவில் இவர்கள் அனைவரும் சேவையில் உறுதிப் படுத்தப்பட்டு விடுவர் என உறுதி கூறியுள்ளார். (லோ)

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையொன்றின் போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்துள்ள பலர் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இதற்காகப்பாவிக்கப்பட்ட பெருமளவு வயர்களும் கைப்பற்றப்பட்டன.

நல்லூர் பிரதேசசபையி... அதிகாரமளிக்கப்பட்ட ...தியோகத்தர் திரு. எஸ். ...திரசேகரத்தின் நடவடிக்கை...யில் மின்சாரப்பகுதி ஊழியர்கள் இதனை மேற்கொண்டிருந்தனர்.

சில இடங்களில் இந்த ஊழியர்களைத்தாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மின்சாரப் பகுதி ஊழியர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய இடங்களில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகளில் இவ்வாறு சட்டவிரோத மின்சாரப்பாவனை கண்டு பிடிக்கப்பட்டதாக உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

சில இடங்களில் வெளியே தெரியாமல் வயர்கள் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டு அவற்றின் ஊடாக மின்சாரம் பெறப்பட்டிருந்தது.

இவ்வாறான செயல்களால்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் நிலையத்தினுள் சைக்கிள் ஆட்டோக்கள் செல்லத்தடை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திற்குள் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இங்கு வாகனக்காரரும், சைக்கிள்காரரும் சண்டபடி உள்ளே செல்வதுடன், பஸ் நிலையத்தைதமது பிரதான பாதையாகவும் பாவித்து வந்தனர்.

இதனால் பஸ் நிலையத்தில் பயணிகளும் பஸ் சாரதிகள் ஊழியர்கள் பெரிதும் சிரமப்பட்டதுடன் பஸ்களை உள்ளே கொண்டு போகவும், வெளியேறவும் இடைஞ்சலாக இருந்தது.

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் எடுத்துள்ள துரித நடவடிக்கைகளைய

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று வங்கியின் விசேட கருமபீடம்

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவ தினங்களாகிய 3. 4. 90 முதல் 15. 4. 90 வரை இலங்கை வங்கி விசேட கரும பீடமொன்றை ஆலய முற்றலில் அமைக்கவுள்ளது.

விசேட கரும பீடத்தின் முதல் நாளாகிய 3. 4. 90 (செவ்வாய்க்கிழமை) இன்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# நாசவேலை காரணமாக கைதாகிய 14,000 பேர் தடுப்புக் காவலில்

நாசவேலைகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கையில் 14,000 பேர் பல்வேறு முகாங்களில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு ஏப்பிரல் நடுப்பகுதிக்கு முதல் அறிக்கையைச் சட்டமா அதிபருக்குச் சமர்ப்பிக்கும்படி பொலிஸ் மா அதிபர் ஏணஸ்ற் பெறேரா, பிராந்திய பொலிஸ் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

தடுப்புக்காவலில் இருப்பவர்கள் 5,000 பேர் தாமாகவே பொலிசில் அல்லது பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தவர்களாம். எஞ்சியவர் தேடுதல் நடவடிக்கைகளின் போது பிடிக்கப்பட்டவர்கள்.

சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படுவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு டிப்போவின் கவலைக்கிடமான நிலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு இ.போ.ச. டிப்போவிலுள்ள 71 பஸ்களில் 52 டஸ்கள் டயர், எஞ்ஜின் மற்றும் உதிரிப்பாகங்கள் இன்றி கட்டையில் வைக்கப்பட்டுள்ளது. 19 பஸ்கள் மட்டும்தான் சேவையிலிடுபடுவதாக டிப்போ முகாமையாளர் திரு. எஸ். ரவிந்திரன் ஈழநாதம் செய்தியாளருக்கு தெரிவித்தார்.

இ.போ.ச. டிப்போ நிலைவரம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

பட்டக்களப்பு டிப்போ 63 பாதைகளில் தினசரி 16,615 கிலோ மீற்றர் சேவையாற்ற வேண்டும். ஆனால் போதிய

(6ஆம் பக்கம் பார்க்க)

## புதிய முறையில் வீதி செப்பனிடல்

(சுதுமலை)
புதிய முறையில் வீதிகளைச் செப்பனிடும் பரீட்சார்த்த நடவடிக்கையொன்று பூநகரி மன்னார் வீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக இந்த வீதியில் 225 அடி தூரம் ஒதுக்கப்பட்டு களி

(6ஆம் பக்கம் பார்க்க)

# காணி, கட்டிடங்கள் மீண்டும் விலை மதிப்பீடு செய்யப்படும்!

(யாழ்ப்பாணம்)
1975ஆம் ஆண்டுக்குப்பின் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்துக் காணிகளும் கட்டிடங்களும் மீண்டும் விலைமதிபபீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணநகரப்பகுதியின் அரை வாசிக்கு மேற்பட்ட பகுதி விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ஏனையபகுதிகள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த மறுவிலை மதிப்பீட்டு நடவடிக்கையால் 1991 ஆம் ஆண்டில் சோலைவரி பெருமளவில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது கட்டிட, காணி சொந்தக்காரர்களால் கட்டப்பட்டு வரும் சோலைவரி 1975ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படியே

(6ஆம் பக்கம் பார்க்க)

## பி.எல்.ஒ. தலைவர் அரபாத் இலங்கை விஜயம்

(கொழும்பு)
பலஸ்தீன விடுதலைத் இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் எதிர்வரும் மே மாதம் அளவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். சபாநாயகர் எம். எஸ். முஹமட் புதுடில்லியில் கடந்தமாதம் யாஸீர் அரபாத்தை சந்தித்த பொழுது இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அவருக்கு அழைப்பு விடுத்திருந்தார். கொழும்பிலுள்ள இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவினைமூடி விடுவதற்கு ஜனாதிபதி எடுத்த முடிவுக்கு பலஸ்தின விடுதலை இயக்கத் தலைவர் தனது தனிப்பட்ட நன்றியையும், பாலஸ்தீன மக்களினதும் நன்றியையும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தூய வெள்ளை நிறமான மேசை உப்புத் தூள் (Table Salt) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு, M. G. M. No. 777, K.K.S. Road, Jaffna (B. 507)

வரலாறு ஆண்டு 6 ஆண்டு 7 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது ஆக்கம் ஆலோசனை எம் எஸ் அப்துல் ரஹீம் தி. கமலநாதன். B.362

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும் உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் கட்டிகள் தாச்சிச் சட்டிகள் றேகள் சோஸ்பான்கள்பொரியல் சட்டிகள் டின்னர் செற்கள் ரீ செற்கள் கோவிற்சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம்.
RAJZ BRAND பார்வை அறை S A தேவதாசன் சூறாவத்தை சுன்னாகம். (B 414)

(டில்கா வாச் வேக்ஸ்)

யாழ்.நகரில் சகல விதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள. DILKA WATCH WORKS Opposite Bus Stand JAFFNA. (குறிப்பு) சகல ,சீக்கோ' சிற்றிசன் உதிரிப் பாகங்களும் கையிருப்பில் உண்டு. (B/537)



## UNIVERSITY OF JAFFNA

### TENDER NOTICE

Tendes are invited for the conversion of ground floor Mathematics block as Computer laboratory from contractors registe, red with University of Jaffna for civil Engineering works for Rs. 1,000,000/- and over.

Tender forms can be obtained from Works Engineer, Uuiversity of Jaffna from 4-4-1990 -- 6-4-1990 on producing a receipt from Bursar, University of Jaffna of payment of;

Non-refundable Rs 500/-
Refundable Rs. 2,500/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 23-4-1990 at 10-00 a.m.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

Registrar,
University of Jaffna,
Jaffna.

B-463


# போராளிகள் ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் பரிசு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்களுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டி., சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கழகத்திற்கு, வடமராட்சி கிழக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரால், இறந்த போராளிகளின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டது.

ஆழியவளை சக்திவேல் விளையாட்டுக்கழகம் இப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டி சம்பியனாகியது. இரண்டாமிடத்தினை செம்பியன்பற்று செம்பியன் விளையாட்டுக் கழகமும், மூன்றாமிடத்தை தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், நான்காமிடத்தை கட்டைக்காடு சென்மேரி விளையாட்டுக்கழகமும், ஐந்தாவது இடத்தை ஆழியவளை அருணோதய விளையாட்டுக் கழகமும், வத்திராயன் வடக்கு உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் பெற்றன.

20 விளையாட்டுக் கழகங்கள் இப் போட்டியில் பங்குபற்றின, (36)

கிளிநொச்சி மாவட்டத்தில்

# மேடைத்தராசு படிகள் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்புத்துறை)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு அளவைகள் நிறுவைகள் திணைக்களம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

விவசாயிகள் நெல் கொள்வனவு செய்யவோ விற்பனை செய்வதற்கோ பாவிக்கப்படும் மேடைத் தராசுகள், படிகள் 1990 ஆம் ஆண்டு முத்திரையிடப்பட்டுள்ளனவா என்பதை அவதானிக்க வேண்டுமென்று நிறுவைகள், அளவைகள் திணைக்களப் பரிசோதகர் திரு கா.நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

முத்திரையிடப் படாத தராசுகளில் வியாபாரம் மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் மேடைத் தராசுகளைப் பொறுத்தமட்டில் சில வியாபாரிகள் 2 படி செற் வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் ஒன்று சரியானது மற்றது நிறை குறைவான படிகள் என்றும் மேடைத் தராசில் 100 கிலோ படியில் 10கிராம் குறைந்தால் (ஈயம் எடுக்கப்பட்டிருப்பின் அல்லது படி தேய்க்கப்பட்டிருப்பின்) நிறையில் 1கிலோ கிராம் எடை குறைவாக இருக்குமென்றும், இவ்விடயத்தில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (24)

## அடையாள உண்ணாவிரதம்

(வட்டுக்கோட்டை)

எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள கண்ணகை அம்மன் கோவில் முன்றலில் அன்னை பூபதியின் நினைவாக திரு. ஆர். ஐயர் தலைமையில் உண்ணாவிரதம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது. (47)

## ஆலய உற்சவம்

(கிளிநொச்சி)

குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அம்மன் ஆலய குளிர்த்தி விழா நேற்று திங்கட்கிழமை விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.

நாட்டில் இடம் பெற்று வந்த அசம்பாவிதங்களினால் கடந்த சில ஆண்டுகளாக விமரிசையாக நடாத்த முடியாதிருந்ததும் குறிப்பிடத்தக்கது.


## யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 4.40 4.45 7.00
THE COUNTESS DIEDOFLAUGHTER
(Adults Only)

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)



## புதுவருட விசேஷ கழிவு 15 வீதம்

வெளிநாட்டிலுள்ள
உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு

புதுவருட பரிசுகள், பார்சல்கள்
அனுப்புவதற்கு 15வீத கழிவு வழங்கப்படுகிறது.

தொடர்பு கொள்க:-

**DHL. INTERNATIONAL LTD.**

C/o Cosmos Marketting Services Ltd,
337, Kasturiar Road,
JAFFNA.

(B /553)



## தமிழ் அன்னை பூபதி



ஈழ விடுதலைக்காய்
இன்னுயிரைத் தானளித்த-வீர
தமிழ் அன்னை பூபதிக்கு



மீண்டும்



## இலங்கை வங்கியின் விசேட கருமபீடம்

மானிப்பாய் மருதடி ஆலய முன்றலில்
03-04-1990 தொடக்கம் 15-04-1990 வரை

இறை வணக்கம் செய்யும் போதே
நிறை வாழ்வுக்கும் நிதி சேகரிக்க
மக்களை அன்போடு அழைக்கின்றோம்.


## வீர அஞ்சலி!



வீரஜனனம்
01.07.1971
வீரமரணம்
01.09.1989

லெப். ராஜீவன்

ஈழ விடுதலைக்காய்
இன்னுயிரைத் தானளித்த-வீர
தமிழ் அன்னை பூபதிக்கு
தீவக சார்பில் எம் அஞ்சலிகள்

**வேலணை ரியூசன் சென்ரர்**

VTC பிரதான வீதி, வேலணை. VTC

R/70

நிறை வாழ்வுக்கும் நிதி சேகரிக்க
மக்களை அன்போடு அழைக்கின்றோம்.

இலங்கை வங்கி
யாழ். மாவட்டம்

(B / 540)



லெப். ராஜீவன்

(தங்கராசா சுதாகரன்)

அச்சுவேலி

ஒரு கணத்தில் நடந்துமுடிந்தது
ஒரு யுகமாகினும் நிலைத்தே நின்றிடும்
உன்
மரணம் வாழ்வின் முடிவேயல்ல....
தாயக விடிவின் அடிவேராகும்
சுதந்திரம் என்ற தாயக கீதம்
சுந்தரத் தமிழில் எழுந்திடும் வேளை
நிரந்தரமாய் உன் தாகம் தணியும்
சுந்தரனே நீ சுடர்வாய் அந்நாள்!
அதுவரை....
நினைவில் ஜனித்து
நிகழ்வில் திளைத்து
நிதமும் வாழ்வாய்
நிதமும் வாழ்வாய்

-- பெற்றோர், குடும்பத்தினர்

B/558

"தோன்றிற் புகழோடு தோன்றுக"

என்ற முதுமொழிக்கிணங்க வாழ்ந்து
புகழுடம்பு எய்திய

**அன்னை பூபதிக்கு**

**எமது அஞ்சலிகள்!**

**சிவா பிறின்டேர்ஸ்**


கைதடி.

B/63

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பொன்னம்பலம்
குகதாஸ்
தோற்றம்: 05.03.1959



பொன்னம்பலம்
வைத்தீஸ்வரன்
தோற்றம்: 03.06.1965

அழிப்பு: 20.03.1986 திதி: 03.04.1990

வனமழித்து வளமாக்கி
வியர்வைதனை உரமாக்கி
மனைசிறக்க மனம்நினைத்த
மருவிய ஈர் செல்வங்கள்
கொற்றரக்கர் கொடுவினையில்
கொள்ளிவைத்து சிதைந்தனவோ
இருளாய் நர்லாண்டு
ஒளியின்றி ஓடினவோ
ஆறுமோ எம் நெஞ்சு
ஐயோ உம் நினைவு!

இங்ஙனம்
பெற்றோர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள்

இடைக்காடு.

(R. 147)

## அன்னை பூபதி

மண்ணுயிர் காக்க
தன்னுயிர் நீத்த
ஈழத் தமிழ்த்தாய்
ஈன்றெடுத்த அன்னை பூபதி...
ஆயுதப் போரிலும்
அகிம்சையே பெரிதென்று
உயிர் தனைக் கொடுத்த
உறுதியின் உறைவிடம்
வீர மண்ணின்
விடுதலை வேங்கை
அகிம்சை வழியில்
அனைவர்க்கும் தலைவி
எம்மவர் நினைவில்
நீங்காத பிறவி!

செல்வோம் அவர் களம்
வெல்வோம் தமிழ் ஈழம்!

**ஊ. பல. நோ. கூ. சங்கம்**

ஊர்காவற்றுறை

(B / 55)

# இங்கிலாந்தின் இளவரசி நீதிமன்றத்தில் ஆஜராவார்

(லண்டன்)

இந்த நூற்றாண்டில் இங்கிலாந்தின் நீதி வரலாற்றில் என்றுமே நடைபெறாத சபபவமாக வேல்ஸ் இளவரசரும் இங்கிலாந்தின் அரச பதவிக்கான அடுத்த வாரிசின் மனைவியாகிய இளவரசி டயானா பரபரப்பான அவதூறு வழக்கொன்றில்முக்கிய சாட்சியாக அழைக்கப்படவுள்ளார்.

இளவரசர் சார்ள்ஸ் போல் வேடம் தரிப்பதில் பிரபல்யமானவரான இங்கிலாந்தின் நையாண்டி நடிகர் மைக்கின் சட்டத்தரணிகள்,அவருக்காக சாட்சி சொல்லவருமாறு டயானாவுக்கு எழுதியுள்ளார்கள். உயர் நீதிமன்றத்துக்கு டயானாவரத் தவறும் பட்சத்தில் நீதிமன்றத்தில்ஆஜராகவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று மைக்கின் சட்டத்தரணிகளில் ஒருவரான ஹென்றி பிறட்மென தெரிவித்தார்.

சென்ற நூற்றாண்டில் வேல்ஸ் இளவரசரான அரசர் எட்வேட் (VII)அவதூறு வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு பிறபிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் சமுகம் அளித்தார்.அரச பரம்பரையில் நீதிமன்றஉத்தரவின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜரான முதல் அரச குடும்பத்தினர் இவர்தான்.

நீதி மன்றத்தில் டயானா சாட்சியமளிக்கும்போது இங்கிலாந்தின் பிரபல்யமான சட்டத்தரணிகளால்அவர்குறுக்கு விசாரணை செய்யப்படுவாராம்.

இங்கிலாந்தின் இராணி இங்கிலாந்து நீதி அமைப்பின் சம்பிரதாய பூர்வமான தலைவர் என்றும் பதவி காரணமாக அவரை மாத்திரம் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி ஆணை பிறப்பிக்க முடியாது.

டயானாவின் கணவரான வேல்ஸ் இளவரசர் சாள்ஸ் போல் வேடம் தாங்கி மைக் நடித்த சமயம், டயானாவைப் பார்வையாளரின் மத்தியில் கண்ட மைக் ''குழைந்தார்'' என்று 'சண்' பத்திரிகை குறிப்பு எழுதியதற்காக மேற்படி பத்திரிகை அவதூறாக எழுதியது என்று குற்றம் சாட்டி மைக் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இவ் வழக்கில்தான் டயனா சாட்சியாக ஆஜராக உள்ளார்.

## கிரகசஞ்சாரம் கற்பனையே!

- இளவரசர் பிலிப்

(வாஷிங்டன்)

அணுகுண்டு வெடித்தால் அதனால உலகிற்கு ஏற்படும் நாசத்தைவிட சனதொகை அதிகரிப்பினால்ஏற்படக்கூடிய விளைவுகள் பாரதூரமானவை என இங்கிலாந்து இளவரசர் பிலிப் எச்சரித்துள்ளார்.

ஐ. நா. சனத்தொகை நிலையத்தில் பேசுகையில், அரசியல் தலைவர்கள் சனத்தொகைப் பிரச்சினைக்கு முகம் சொடுத்து, ஜனத்தொகை வளர்ச்சியைக்கட்டுப்படுத்த வேண்டிய காலம் இது தான் என்றார் இளவரசர் பிலிப்.

இங்கிலாந்து இராணி எலிசபெத்தின் கணவர் இளவரசர் பிலிப் உலக இயற்கை வளநிதியத்தின் தலைவரென்பது குறிபபிடத்தக்கது. அவர் தொடர்ந்துபேசுகையில்

வேறொரு கண்டத்தில் அல்லது கிரகத்தில் இருப்பிடங்களை எப்படியாவது அமைத்துக்கொள்ளலாம் என்று சிலர் நம்புவது விஞ்ஞானக் கற்பனைக் கதையில் ஊறித் திளைப்பதாகும் என்றார்.



# இரசாயன தொழிற்சாலைக்கு கடாபி தீவைப்பு -அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

லிபியாவின் தலைவர் கடாபி நபட்டாவில் உள்ள இரசாயன நச்சு ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு தீவைத்திருக்க வேண்டும் என்று ஐக்கிய அமெரிக்கா கருதுவதாக ராஜாங்க திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் மத்தியில் இத் தீவைப்புச் சம்பவம் தொடர்பாக மாறுபட்ட கருத்து நிலவி வருகிறதாம். தீவைப்புக்குரிய காரணங்கள், அழிவுகளின் பெறுமானம் தொடர்பாக புலனாய்வுத் துறையினர் மத்தியில் பாரிய கருத்து வேறுபாடு நிலவுகிறது.

உற்பத்தி நடைபெற முடியாத அளவுக்கு இத் தொழிற்சாலை தீயினால் நாசமடைந்து உள்ளதாக தொழிற்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நியூயோர்க் டெய்லி நியூஸ் நின்றுவிடும்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் ஆகக் கூடிய விற்பனையுள்ள நாளிதழான நியூயோர்க் டெய்லி நியூஸ் திடீரென வெளிவராமல் நின்றுவிடக் கூடுமாம். இப்பத்திரிகையின் உரிமையாளரான சிக்காக்கே நிபியூன் கம்பனிக்கும், மேற்படி பத்திரிகை ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற் சங்கங்களின் தலைவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் கசப்பான சூழ்நிலையில் இடம் பெற்றதைத் தொடர்ந்தே பத்திரிகை நின்றுவிடக்கூடும் என்ற அறிகுறிகள் தென்படுகின்றன.

முக்கியமான கோரிக்கைகளில் ஒன்றான மேலதிக ஊழி...க்கி, நவீன அச்சு இயந்திரங்களைப் பொருத்துவதென பத்திரிகை உரிமையாளர் தீர்மானித்துள்ளனர்.

வருடமொன்றுக்கு 400 மில்லியன் டொலர் வருமானமுள்ள இப்பத்திரிகைப் நிறுவனம் லாபமின்றி நட்டத்தில் ஓடுவதற்குக் காரணம் தொழிற்தகராறு என்று கம்பனியின் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. தொழிலாளர் பிரச்சினையால் வருடமொன்றுக்கு 50 மில்லியன் டொலர் நஷ்டம் ஏற்படுகிறதாம்.

தினசரி 15 இலட்சம் இதழ்கள் விற்பனையாகும் இப் பத்திரிகை நிறுவனம் நல்லெண்ணத்தோடு நடந்து கொள்ளாமல் தொழிற்சங்கங்களை ...

## அதிபர் ஓய்வு பெற்றார்

(வவுனியா)

ஓமந்தை மகாவித்தியாலயத்தில் 16வருடங்கள்அதிபராக கடமையாற்றிய திரு லோகசிங்கம் ஓய்வு பெற்றதையடுத்து பிரியாவிடை வைபவம் ஓமந்தை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் மேற்படி பாடசாலையின் சின்னம் ...

## கிளிநொச்சி கிழக்கில் சமாதான சபை

கிளிநொச்சி கிழக்குப் பிரதேசத்தில் முதலாவது சமாதான சபை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி கிழக்கு பிரதேச பொறுப்பாளர் அலெக்ஸ் முன்னிலையில் ஏழு பேர் கொண்ட இச்சபை அமைக்கப்பட்டது.

இராமநாதபுரம், வட்டக்கச்சி பகுதி மக்கள் மத்தியில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கவும், அப்பகுதி மக்களைச் சமாதானமாக வாழ வைக்கவுமே இச் சமாதான சபை உருவாக்கப்பட்டது.

## புனரமைப்பு

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதியில் உள்ள புலோலி நூலக குரும்பசட்டி வீதி சுமார் 75-000 ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப் படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (25)

## சிறைச்சாலையில் தீ விபத்து

(லண்டன்)

பிரித்தானியாவில் ஞாயிறு மான்சஸ்ரர் சிறைச்சாலையில் மிகப் பெரும் தீ விபத்துநேரிட்டதன் விளைவால் அங்கிருந்த நூற்றுக் கணக்கானோர் சிக்கிக் கொண்டனர்.

இத் தீ விபத்து ஏற்படுவதற்கு அச்சிறைச்சாலையில் சிறையிருந்த கைதிகளேவெளியில் வந்து இதனை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பாவில் பெரும்எண்ணிக்கையில் கைதிகளைக் கொண்ட ரெயின் வீல்ஸ்நிலைமையை ஆட்சேபித்து அவர்கள் ஆர்ப்பாட்டம்செய்தனர். இதன் விளைவாகவே இத் தீ விபத்து நடைபெற்றதாகத் தெரிகிறது.

மேலும் மான்சஸ்ரர் சிறைச்சாலை 1868-ல் 970 கைதிகளுக்காகக் கட்டப்பட்டது. ஆனால் இப்பொழுது சுமார் 1600 பேர் உள்ளனர். இந்தக் கலகங்களில் 32 பேர் வரை காயமுற்றார்கள் இச் சிறையில் இருந்த மீதிப்பேர் வேறு இடங்களுக்கு வெளியேற்றப் பட்டு விட்டனர்.

## அமெரிக்காவின் மிரட்டலுக்கு இந்தியா பணியாது

(டெல்கி)

அச்சுறுத்தல்களுக்கோ தண்டனைகளுக்கோ பயந்து அமெரிக்காவுடன் எந்தவிதமான வர்த்தக உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளப் போவதில்லை என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பாக அமெரிக்காவின் வர்த்தக அதிகார சட்டத்தின் கீழ் காப்புறுதி, முதலீடு என்பன சம்பந்தமாக இந்தியா ஜப்பான், பிரேசில் ஆகிய நாடுகளுக்கு எதிராக கட்டுப்பாடுகள் கொண்டு வரப்படும் என அமெரிக்கா எச்சரிக்கை செய்திருந்தது.

இந்திய அரசாங்கம் இது பற்றி கருத்து வெளியிடுகையில் இந்தரப்பு வர்த்தக பிரச்சினைகள் அனைத்தும் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்படுவதையே இந்தியா விரும்புவதாக குறிப்பிட்டுள்ளது.

இதேவேளையில் இந்தியா ...

## சிம்பாப்வே தேர்தலில் ஆளும்கட்சிஅமோக வெற்றி

(ஹராரே)

சிம்பாப்வே நாட்டில் நடந்த பொதுத்தேர்தலில் ஆளும் சானோபீயக் கட்சி மீண்டும் பெரும் வெற்றியை பெற்றிருக்கிறது.

... 3 இடங்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ராபட் மொகாபே மிகச் சுலபமாக வெற்றியீட்டியுள்ளார். மொத் ...

## கிளி. பரந்தன் வங். அடகு நகைகள் வழங்ல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன் மக்கள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் நேன்று திங்கள் முதல் புதன்கிழமை வரை வழங்கப்பபட்டுவருகிறது பரந்தன் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டு பணம் செலுத்தியவர்களின் நகைகள் திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களிலும், கிளிநொச்சி மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளுக்கு உரிய பணத்தை செலுத்தியவர்களுக்கு புதன்கிழமையும் நகைகள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் வைத்து இந்த நகைகள் வழங்கப்படும்.

(த)

## முட்டை விலை அதிகரிப்பு

(தீவுப்பகுதி)

யாழ்ப்பாணக்குடா நாட்டில் கோழி முட்டைகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. தகபோது யாழ் நகரில் கோழி முட்டை ஒன்றின் விலை மூன்று ரூபா வரை விற்கப்படுகின்றது. இதே விலைகளில் தான் கிராமப் புறங்களிலும் உள்ளது. சோழித்தீனின் விலை அதிகரிப்பே இம்முட் ...

...தைகள் கசப்பான சூழ்நிலையில் இடம்பெற்றதைத் தொடர்ந்தே பத்திரிகை நின்றுவிடக்கூடும் என்ற அறிகுறிகள் தென்படுகின்றன.

முக்கியமான கோரிக்கைகளில் ஒன்றான மேலதிக ஊழியர் நியமனம், வேறு குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து வருமானத்தைப் பெரு...

...50 மில்லியன் டொலர் நஷ்டம் ஏற்படுகிறதாம்.

தினசரி 15 இலட்சம் இதழ்கள் விற்பனையாகும் இப் பத்திரிகை நிறுவனம் நல்லெண்ணத்தோடு நடந்து கொள்ளாமல் தொழிற்சங்கங்களை பழி கூறுவதில் காலத்தைக் கடத்துகிறது என்று தொழிற்சங்கத் தலைவர்கள் சாடுகிறார்கள்.

...சிங்கம் ஓய்வு பெற்றதையடுத்து பிரியாவிடை வைபவம் ஓமந்தை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் மேற்படி பாடசாலையின் சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கம் ஓய்வு பெறும் அதிபருக்குப் பரிசளிக்கப் பட்டது. (தி)

(ஹராரே)

சிம்பாப்வே நாட்டில் நடந்த பொதுத்தேர்தலில் ஆளும் சானோபீயக் கட்சி மீண்டும் பெரும் வெற்றியை பெற்றிருக்கிறது.

இதுவரை அறிவிக்கப்பட்ட 101 இடங்களில் 93 இடங்கள் அந்தக் கட்சிக்கு கிடைத்துள்ளன. எதிர்க்கட்சிகளுக்கு 3 இடங்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ராபட் மொகாபே மிகச் சுலபமாக வெற்றியீட்டியுள்ளார். மொத்தமுள்ள 120 தொகுதியில் 14 முடிவுகள் வரவேண்டிய நிலையில் 82% கூடுதலான வாக்குகளை பெற்றுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சிம்பாப்வே ஒற்றுமை இயக்கத்தின் வேட்பாளர் எட்கார்ட் சக்ரே 18% குறைவாகவே பெற்றிருக்கிறார்.

இந்த பெரும்பான்மைவெற்றி மூலம் சிம்பாப்வே நாட்டை ஒரு கட்சி ஆட்சி முறைக்கு மாற்றுவதற்காக அரசியல் சாசனத்தை திருத்துவதற்கு வேண்டிய ஆதரவு ஆளும் கட்சிக்கு கிடைக்கவிட்டது.

...யில் இருதரப்பு வர்த்தக பிரச்சினைகள் அனைத்தும் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்படுவதையே இந்தியா விரும்புவதாக குறிப்பிட்டுள்ளது.

இதேவேளையில் இந்தியாவையும் நேபாளத்தையும் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் காட்மாண்டுவில் சந்தித்து இருதரப்பு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வழிகள் பற்றி ஆராய தொடங்கி உள்ளனர்.

...போது யாழ் நகரில் கோழி முட்டை ஒன்றின் விலை மூன்று ரூபா வரை விற்கப்படுகின்றது. இதே விலைகளில் தான் கிராமப் புறங்களிலும் உள்ளது. சோழித்தீனின் விலை அதிகரிப்பே இம்முட்டை விலையேற்றத்துக்கான காரணமென கோழி வளர்ப்போர் தெரிவிக்கின்றார்கள். முட்டை விலையேற்றத்தினால் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (15)

# “சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொண்டு மனவலிமை பெற்றுள்ளீர்கள்”

## --அன்ரன் பாலசிங்கம் உரை

(கரவெட்டி)


‘‘எந்தவொரு போராட்ட வரலாற்றிலும் மக்கள் எதிர்கொள்ளாத சோதனைகளையும், வேதனைகளையும், தியாகங்களையும் நீங்கள் எதிர்கொண்டுள்ளீர்கள். தொடர்ந்தும் எதிர் கொள்ளும் மனவலிமை பெற்றுள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் ஓர் நிரந்தர நிம்மதி ஏற்பட வேண்டுமானால், உங்களுக்காக களத்திலேமடிந்த கனிகளின்கனவுகள் நனவாக வேண்டுமானால் நீங்கள் அனைவரும் எமது தேசிய இயக்கமாகிய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பின்னும், அந்த இயக்கத்தை வழிநடத்திச் செல்லுகின்ற தேசியத் தலைவர் மதிப்புக்குரிய திரு. வே பிரபாகரனின் தலைமையின் கீழும் அணிதிரள முன்வர வேண்டும்’’

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நெல்லியடியில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கில்கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்குகிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. என். செங்கதிர் தலைமைவகித்தார். திரு. அன்ரன் பாலசிங்கம் தொடர்ந்துபேசுகையில்,

‘‘கடந்த ஓராண்டு காலப் பகுதிக்கு முன்னர் இந்திய ஆக்கிரமிப்பாளர் ஒருபுறமும், இலங்கைப் படையினர் இன்னொருபுறமும் தமிழ்துரோகக் கும்பல்கள் மறுபுறமுமாகச் செயற்பட்டுஎம்மைஅழித்தொழிக்க கங்கணம்கட்டி நின்றார்கள் அந்த வேளை பொதுமக்கள் பலரும் விடுதலைப் புலிகள் இந்த மூன்று சக்திகளையும் எதிர்த்துப் போரிட முடியுமா என ஆதங்கப் பட்டுக் கொண்டனர். அந்த நேரத்தில் நாம் இராணுவம், அரசியல், இராஜ தந்திர ரீதியில் மிகவும் முனைப்பாகச் செயற்பட்டோம். அதற்கிணைவாகவே இலங்கை அரசுடனும் பேச்சு வார்த்தைக்குச் சென்றோம். இது நாம் பலவீனமான முறையில் தேடிப்போய் மேற்கொண்ட விடயமல்ல. அவர்களின் அழைப்பின் பேரில் ஆயுத பலம்பொருந்திய நிலையில் மேற் கொண்ட விடயமாகும்.

சிங்கள அரசானது கடந்த காலங்களில் நிகழ்த்திய கபட நாடகங்கள், எமது கண்முன் நிழலாடிக் கொண்டிருக்கின்றன. கடந்தகாலங்களில்எமது மண்ணில் நிகழ்த்திய கொடுமைகள் இன்றும் எமது மனத்திரையில் படம் பிடித்தவாறு காணப்படுகின்றது. இருந்தும் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கும் முகமாகவே, நாம்பேச்சுவார்த்



தைக்குச் சென்றுள்ளோம். இந்தப்பேச்சு வார்த்தையை அர்த்த புஷ்டியாக்குவதும், நம்பிக்கைக்குரியதாக மாற்றிக் கொள்வதும் இலங்கை அரசாங்கத்தின் கையிலே தான் உண்டு. ஆனால் விடுதலைப் புலிகளுடன் ஒரு மோதலை ஏற்படுத்த இலங்கை ஜனாதிபதி தயாராகவில்லை. ஆயினும் அவரது படைகளும், அவரது கட்சி உறுப்பினர்களும் திரை மறைவிலான செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். அதனை முன்னெச்சரிக்கையாக செய்ய பல காரியங்களைச் செய்து வருகின்றோம்.

இலங்கையுடன் நாம் நிகழ்த்திய பேச்சுவார்த்தையில் எமது அடிப்படைப் பிரச்சினைகள் பல இன்னமும் தீர்க்கப்படவில்லை. ஆயினும் விடுதலைப் புலிகள் ஆயுதம் தூக்கிப் போரிடுவதைத் தவிர வேறு வழிதெரியாதவர்கள். இவர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றவர்களென கூறுபவர்களுக்கு தகுந்த பாடம் படிப்பிப்பதற்காகவும் உலக நாடுகளுக்கு எமது செல்வாக்கினை எடுத்துக் காட்டுவதற்காகவுமே நாம் தேர்தலில் பங்குகொள்ள உத்தேசித்துள்ளோம்.

இன்று சிலர்எம்மை ஆயுதங்களைக்கீழே போடும் படி அமைச்சரவையிலிருந்து வேண்டியுள்ளார்கள். இவர்களின் இந்த அற்ப சலுகைகளுக்காகவோ, வெறும் வாக்குறுதிகளுக்காகவோ 11 ஆண்டு காலமாக இரத்தம் சிந்திப் போராடி வரும் நாம் எமது பலமாகத்திகழும் ஆயுதத்தைக் கீழே போடத்தயாரில்லை’’என்றார்.

இவ்வைபவத்தில்விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நெல்லியடிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. குணபாலும்பிரசன்னமாயிருந்தார். 18

### ஜனசக்தி ஆண்டு விழாவுக்கு கரப்பந்தாட்டப்போட்டி

நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 42வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக ஆறுபேர் கொண்ட ‘ஓவர்கேம்’ கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று நடைபெறவுள்ளது. இம் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் கழகங்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் ஜனசக்தி சனசமூக நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார்.

### பாடசாலையில் கண்காட்சி

சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கண்காட்சியில் வவுனியா முறைசாராக்கல்வி மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட கைவேலைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

இதேபோல வவுனியா புதுக்குளம் கொத்தணி மகாவித்தியாலயத்லும் கண்காட்சி நடபெற்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட கைவேலைப் பொருட்கள் காட்சிக்கு வைக்) கப்பட்டிருந்தன. (தி)


## மக்கள் வங்கி

அடகு நகைகள் மீளளித்தல்

முல்லைத்தீவு மாவட்டம்

06. 12. 83 வரை முல்லைத்தீவுக் கிளையில் அடைவு வைத்து அவற்றை மீளப் பெறுவதற்காக 21. 09. 89 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள போக்குவரத்துச் சபை டிப்போ கட்டிடத்தில் இயங்கும் பொலிஸ் நிலையத்தில்வைத்து பின்வரும் திகதிகளில் காலை 8 .30 மணி முதல் பி. ப 1.00 மணி வரை மீளளிக்கப்படும்.

| வழங்கும் திகதி | கிழமை |
| --- | --- |
| 04. 04. 90 | புதன் |
| 05. 04. 90 | வியாழன் |
| 06. 04. 90 | வெள்ளி |

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை பணம் கட்டியதற்கான வங்கி இரசீது, வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

முல்லைத்தீவுக் கிளையில் 06. 12. 83 க்குப் பின்னர் அடைவு வைத்து 21. 09. 89 வரை மீளப் பெறுவதற்காக பணம் கட்டியவர்களினதும். மாங்குளம் கிளையில் அடைவு வைத்தவர்களினதும் நகைகள் இரண்டாம் கட்டமாக விரைவில் வழங்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

B/534

## கண்டெடுத்த கடவுச்சீட்டு

(யாழ்ப்பாணம்)

செல்வி அனுஷாதேவி அருணாசலம் என்பவரின் கடவுச்சீட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்களை சமர்ப்பித்து இக்காரியாலயத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்.

## சட்டவிரோத மின்பாவனையால் மின்மாற்றி சேதமாகலாம்

(சுழிபுரம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் காரியாலய மின்சாரப்பகுதி ஊழியர்களின் தீவிர நடவடிக்கைகள் மூலம் பெருமளவிலான சட்டவிரோத மின் தொடுப்புகள் அகற்றப்பட்டன. இதனால் மின்விநியோகத்தில் ஓரளவு சீர் ஏற்பட்டுள்ளது.

ஆயினும் சுழிபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும், அப்பகுதி மக்களினதும் தீவிர முயற்சிகளின் மத்தியில், ஏழரை இலட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட ''ட்ரான்ஸ்போமர்', இரண்டரை வருடங்களுக்கும் மேலாக இயங்காமல் இருப்பதால்' அப்பகுதிக்கான மின் விநியோகம் சீரின்றி உள்ளதாக மின் பாவனையாளர் கவலை தெரிவித்தனர்.

சுழிபுரம் பகுதியில் உள்ள எழுநூறுக்கும் அதிகமான மின்சாரக் கட்டணம் செலுத்திப் பாவிக்கும் பொதுமக்களும், ஆலயங்கள், மில்கள் மற்றும் வியாபார நிலையங்களும் வழக்கம்பரையிலுள்ள ஒரேயொரு மின்மாற்றி மூலமே மின்சாரத்தைப் பெறுகின்றன.

200 கே.வி.ஏ. கொள்வனவு கொண்ட இம்மாற்றி குறிப்பளவுக்கு மேலான அழுத்தத்தை வெளிவிடுகின்றமையால், சட்டவிரோத மின் பாவனையாளர்களும், மின்சாரத்தைத் தவறான வழியில் பெறுபவர்களும் அந்நடவடிக்கைகளைக் கைவிடாவிட்டால், இந்த மின்மாற்றி வெடித்து விடும் அபாயம் ஏற்படுமென மின்சார சபை ஊழியர் ஒருவர் எச்சரிக்கை செய்துள்ளார்.


## இங்கிலாந்தில் பயிற்சி

லண்டனில் உள்ள வெளிநாட்டு அபிவிருத்தி இயற்கை வளம் கற்பிக்கும் வெப்பவலைய நாடுகளில் குளிரூட்டி மூலம் விவசாயப் பொருட்களை பாதுகாத்து வைக்கும் முறைகள் சம்பந்தமான பயிற்சிக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது. இப்பயிற்சி இவ்வாண்டு ஆகஸ்ட் 17 முதல் டிசம்பர் 07 வரையிலானதெனவும் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்ப இவை நீடிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக்கு உயிரியல், விவசாயம், பொறியியல் பட்டதாரிகளும் இத்தொழில் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். பயிற்சி ஆங்கிலத்தில் நடைபெற இருப்பதால் ஆங்கில பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது பிரித்தானிய கவுன்சில் நடத்திய ஆங்கில சோதனையில் சித்தி அடைந்திருக்க வேண்டும். விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

207 இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். B/535


## பரீட்சையில் குதிரை பிடிபட்டது

(வவுனியா)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை ஓமந்தை மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் குதிரை ஓடிய மாணவர் ஒருவரை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

மேற்படி ஆள் மாறாட்டத்தில் ஈடுபட்டவர் சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாணவர் புலிகளினால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். (தி)


## அன்னை பூபதிக்கு அஞ்சலி



ஜீவனா போட்டோ
கண்டி வீதி,
சாவகச்சேரி. B/514



## பனை அபிவிருத்தி ஆய்வு

பனை அபிவிருத்திச்சபை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் பனைவள அபிவிருத்தி ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வு தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு (சித்திரை, வைகாசி - 1990) வெளிக்கள ஆய்வாளர்கள் வடக்கு - கிழக்கு பிரதேசத்திலிருந்து தேவைப்படுகின்றார்கள். வெளிக்கள ஆய்வாளர்களுக்குத் தகுந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேர விரும்புபவர்கள் கல்வித்தகைமை விபரங்களுடன் இம்மாத முடிவுக்குள் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன்

கலைப்பீட அலுவலகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(B- 536)


## படையினருக்கு தமிழ்ப்பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

(கொழும்பு)

ஆயுதப்படையினருக்கு தமிழ் மொழியில் பயிற்சி பெற்றதற்கு அண்மையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மஸ்வெல தமிழ்மொழி பயிற்சி கலாசாலையில் விமானப்படைத் தளபதி எயர் வைஸ்மார்சல் ரெறன்ஸ் குணவர்த்தனா இவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

ஐம்பத்திரண்டு இராணுவத்தினர் பத்து கடற்படையினர், ஒன்பது விமானப் படையினர், பதினான்கு பொலிஸார் இந்தப் பயிற்சியை முடித்துக் கொண்டு சான்றிதழ்களைப் பெற்றனர்.

இந்த வைபவத்தில் தேசிய விமானப்படைத் தளபதி; தமிழ் தெரியாத இவர்கள் விரைவாக தமிழ் மொழியைக் கற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியது. இலங்கைப் பிரஜைகள் தமது சகோதர மொழிகளை அறிந்திருக்க வேண்டும். இதனால் சகல சமூகத்தினரிடமும் தொடர்புகள் ஏற்படுகின்றன என்றார்.


## உடன் தேவை
## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

1. பதவிகள்:- நிறைவேற்று அலுவலர் / கணக்காளர்.
2. வயது: 45 -- 55
3. தகுதி (2) அரசாங்க / கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்கள் இத்தகைய வெற்றிடங்களுக்கு தமது தராதரப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கலாம்.
4. சம்பளம்:- 1) நிறைவேற்று அலுவலர் சகலமும் உட்பட மாதம் 2500/- ரூபா
   2) கணக்காளர் மாதம் 2250/-
5. பிணைப்பணம்:- ரொக்கம் ரூபா 5000/- (வட்டியுடன் மீளக் கொடுக்கப்படும்)
6. விண்ணப்பமுடிவுத் திகதி:- 15 - 04 - 1990
7. (1) கல்வித்தராதரம்:- க. பொ. த (உயர்தரம்) மற்றும் உயர்கல்வி சான்றுகள்.
   (2) இந்துவாகவும், ஆலய அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
   (3) அனுபவம்:- முன் அனுபவம் பற்றிய 2 சான்றுப் பத்திரங்கள்.

இங்ஙனம்
ஆ. தியாகராசா
கௌரவ செயலாளர்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(B / 477)


தமிழீழ விடிவிற்காய் தன் இன்னுயிரை ஈந்த

அன்னை பூபதிக்கு

அன்னை பூபதிக்கு

# எம் கண்ணீர் அஞ்சலிகள்

## மறந்திடுவோமா அம்மா உன்
## மாபெரும் தியாகத்தை!



கம்பிச் சிறைக்குள்ளே வெம்பியும் வெதும்பியும்
பிள்ளைகள் துடித்திருக்க தாய்பூமி பறிபோக
கண்டதும் சுடுகின்ற காவல் தர்மத்தைக்
கொண்டவர்கள் மீண்டும் காவலுக்கு வருவதெனில்
வேலி ஓரத்தில் கறையான்கள் புற்றெடுக்க
கூலிகள் சேர்ந்து புகழ்பாடும் பதவிகளும்
விழுதுவிட்டு வளர்ந்த விருட்சமொன்றில்
பழுதுபட்டால் பார்த்திருத்தல் பாவமென்று
தங்கத்தமிழ்த் தாயின் விலங்குடைக்கப் புறப்பட்ட
எங்களின் **பூபதி அம்மா!**
அங்கம் சோர்ந்ததோ அகிம்சைப் போரிலே
ஒன்றல்ல ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
மறந்திடுவோமோ அம்மா! உன் மாபெரும் தியாகத்தை!

## பலாலி கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு
### பருத்தித்துறை வீதி, பலாலி.

## Palaly Fishermen Social Development Association
***Pointpedro Road, PALALY.***

R.60

### சிந்தனைக்கு

எதையும் உண்மைக்காக இழக்கலாம் - ஆனால்
எதற்காகவும் உண்மையை இழக்கக்கூடாது

- காந்தியடிகள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 03 · 04 - 90

# மருந்திற்கு முதல் நோயை அறியுங்கள்

பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? எங்கே இருக்கிறார்? இந்தக் கேள்விகள் வெளிநாடுகளில் மட்டுமல்ல உள்ளூருக்குள்ளேயே பலமாகக் கேட்கப்பட்டன.

பிரபாகரன் மரணமடைந்து விட்டதாகவும் அவரது சகாவே அவரைக் கொலை செய்ததாகவும் கடந்த வருடம் 'றோ' என்ற இந்திய புலனாய்வுப் பிரிவும் இந்திய இராணுவமும் அது கூட்டி வந்த குழுக்களும் இந்திய வானொலியும் சேர்ந்து பெரும் புரளியைக் கிளப்பி உலகையே ஒரு கலக்குக் கலக்கியிருந்தனர்.

இந்தப் புரளிக்குப்பின் பல வதந்திகள் பரவின.

கடந்த வியாழக்கிழமை யாழ். நகருக்கு தலைவர் பிரபாகரன் வந்துவிட்டார் என்று 'ஈழநாதம்' பத்திரிகை கடந்த வெள்ளிக்கிழமை இதழில் முதல் பக்கத் தலைப்புச் செய்தி வெளியிடும்வரை இந்த வதந்திகளே பரவி வந்தன.

நேற்று முன்தினம் உள்ளூர்ப் பத்திரிகையாளர்களை யாழ் நகரில் சந்தித்துப் பேட்டியளித்ததன் மூலம் புரளிகளுக்கும் வதந்திகளுக்கும் தலைவர் பிரபாகரன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

தம்மைப்பற்றிய வதந்திகளுக்கும் புரளிகளுக்கும் மட்டும் தலைவர் பிரபாகரன் முற்றுப்புள்ளி வைக்கவில்லை; ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் தென்னிலங்கையில் அடிக்கடி ஒலித்துக்கொண்டிருக்கும் குரலுக்கும் சரியான பதில் கொடுத்திருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்ற குரல் இந்திய இராணுவம் வெளியேறியதும் தென்னிலங்கையில் உரத்துக் கேட்கத் தொடங்கியிருக்கிறது.

''விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென சிங்கள இனவாதப் பத்திரிகைகள் குரலெழுப்பி வருவதைக் காணும்போது வேதனையாக இருக்கிறது. ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பாமல், எதற்காக எமது விடுதலை இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது, எதற்காக நாம் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதப்போராட்டத்தை நடத்தினோம். இதற்கான காரணிகள் என்ன என்பதைச்

# இந்து சமுத்திரம் உலகின் புதிய அதிகார மையம்

இந்து சமுத்திரத்தை எவர் கட்டுப் படுத்துகின்றாரோ, அவரால் உலகின் புதிய அதிகார மையத்தைக் கட்டுப் படுத்தி, உலக அரசியலில் முன்னணியில் திகழ முடியும். என்று பேராசிரியர் போன் இந்து சமுத்திரப் பிராந்தியம் தொடர்பாக அமெரிக்க இராணுவத்தின் கொள்கை பற்றித் தெளிவாக விளக்கியுள்ளார்.

இந்துசமுத்திரத்தில் புதிய அதிகாரமையத்தை ஏற்படுத்துவதுதான் இந்து சமுத்திரம் தொடர்பான அமெரிக்காவின் கொள்கையாகும்.

மேற்கு ஐரோப்பாவுக்கும், தூரகிழக்கிற்கும் அடுத்ததாக இந்து சமுத்திரம் 'மூன்றாவது சேந்திர முக்கியத்துவம்' வாய்ந்த இடமாக அமெரிக்க நிர்வாகம் 1980-ல் பிரகடனப்படுத்தியது. இப் பிரகடனத்தின்படி இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பாரசீகக்குடா, தெற்கு ஆசியா, தென்மேற்கு ஆசியா, மத்திய கிழக்கு ஆகிய விசாலமான பிரதேசங்கள் உள்ளடங்கும்.

1983-ல் வாஷிங்டன் அதிகார பீடம் இன்னொருபடி முன்னேறி, இந்துசமுத்திரம் பிராந்தியத்தை இராணுவ மயப்படுத்தும்நோக்கத்துடன் மத்தியகட்டுப்பாட்டு நிலையத்தை ஸ்தாபித்தது. மத்தியகட்டுப்பாட்டு நிலையத்தின் அதிகார எல்லைக்குள் மத்தியகிழக்கு, அண்மைக் கிழக்கு, மேற்கு ஆசியா, வடகிழக்கு ஆபிரிக்கா தென் ஆசியா ஆகிய 19 நாடுகள் இடம் பெறுகின்றன. மேற்கூறிய நாடுகளின் விருப்பத்தைக் கேளாமல் அமெரிக்கா தன்னிச்சையாக இந்நாடுகளை மத்திய கட்டுப்பாட்டு நிலையத்தின் எல்லைக்குள் கொண்டுவந்தது.

அமெரிக்கத் தந்திரோபாயக் கொள்கை வகுப்பாளரின் கருத்துப்படி, ஸ்திரமற்ற இப் பிரதேசத்தைக் கண்காணிப்பதற்காக மத்திய கட்டுப்பாட்டு நிறுவனம் (CENTCOM) பத்து வருடங்களுக்கிடையில் துரிதகதியில் 600,000 துருப்புக்களை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வைத்திருக்க வேண்டும்.

துரிதகதியில் இயங்கும் இப் படைக்கு ஒரு 'மிதிபலகை'யை அமைக்கும் முயற்சியில் சமீப காலங்களில் பென்ரக்கென் செயற்பட்டு வருகிறது. ஆபிரிக்காவின் கிழக்குக் கரையிலிருந்து அவுஸ்ரேலியாவின் மேற்குக்கரைவரை ஐக்கிய அமெரிக்கா சங்கிலிப் பின்னல் போல் 30 இராணுவ தளங்களையும் முகாம்களையும் அமைத்துள்ளது.

### இந்து சமுத்திரத்தில் அமெரிக்க பலம்

இந்துசமுத்திரத்தில் செயற்படும் அமெரிக்க இராணுவ அணியின் ஒரு அலகில் 30-40 வரையிலான அமெரிக்க யுத்தக் கப்பல்கள் உள்ளன. இக் கப்பல்கள் நிரந்தரமாக இந்து சமுத்திரத்தில் நிலைகொண்டு செயற்பட்டு வருகின்றன. ஒன்று அல்லது இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்கள், ஏவுகணைகள் தாங்கியகாவற் கப்பல்கள் 2 முதல் 4 வரை நாசகாரிகள், அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள துரிதமாகச் செயற்படும் போர்க் கப்பல்கள். இராணுவத்துக்கான கனரகப் பொருட்களையும். வேறு பல பண்டங்களையும் தாங்கிய 'மிதக்கும் களஞ்சியங்கள்' ஆகியனவும் இந்திய சமுத்திரத்தில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க இராணுவ அணியுடன் இணைந்தவையாகும்.

இந்து சமுத்திரத்தில் நிலைகொண்டிருக்கும் இந்த அமெரிக்க இராணுவ அணியின் யுத்த பலம் காலப் போக்கில் வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளன. நவீன யுத்தக் கப்பல்களுடன் கூடிய அணுஆயுதக் கப்பல்கள், புதிய ரக ஆயுதங்கள், உபகரணங்கள், துரிதகதியில் இயங்கும் ரொம்குவாக் ஏவுகணைக் கப்பல்கள், கப்பல்களை எதிர்த்துத் தாக்கும் ஹாம்பூன்ஸ் போன்றவையும் இந்த அமெரிக்க அணியில் சேர்த்து கொள்ளப் பட்டிருக்கின்றன.

பென்ரகன் நிர்வாசம் நிரந்தரமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க கடற்படை, விமானப்படை, காலாட்படைப் பிரிவுகளையும் வைத்திருக்கத் திட்டம் தீட்டியுள்ளது.

விமானம், இராணுவம், கடற்படை இம்மூன்றும் சேர்ந்த தொகுதியில் ரைரென்ட. B-52 விமானங்களும், பாரிய அளவிலான ஆயுதப் படைகளும், கடற்படையும் குவிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவும், அதாவது யுத்த நண்பர்களான இஸ்ரேல் சவூதி அரேபியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் போர்ப் பலமும் வளர்ந்த வண்ணமிருக்கின்றன.

பத்திரிகைச் செய்திகளின் பிரகாரம் ஓமான், சோமாலிய, கென்யா, சவூதி அரேபியாவும், அமெரிக்காவின் நேரடிச் செல்வாக்கின் கீழ் அமெரிக்கா செயற்படும் நாடுகளிலும், தேவை ஏற்படும் போது துரிதகதியில் இயங்கும் ஆறு கடற்படை, இராணுவம் பிரிவுகளையும், 600 முதல் 700 வரையிலான விமானங்களையும் அமெரிக்கா அனுப்பி வைக்கும் பட்சத்தில், அவற்றிற்கு இடமளிக்கக் கூடிய வாய்ப்பு வசதிகள் மேற்கூறிய நாடுகளில் உள்ளன.

அமெரிக்க தந்திரோபாயத்தின்படி இந்து சமுத்திரத்தில் பாக்கிஸ்தானின் பங்கு மிக முக்கியமானது. ராடர் கருவிகள், கோப்றாகெலிகள், தாங்கிகள் ஏவுகணைகள், ஹாப்பூன்ஸ் இத்தியாதி போர்க்கருவிகளை பாக்கிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து பெறவுள்ளது. இப் போர்க் கருவிகளின் பெறுமானம் 4.02 பில்லியன் ஸ்ரோலிங் பவுண்ஸ் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

(தொடரும்)

#### வட்டுக்கோட்டையில்

# மக்கள் முன்னணி அலுவலகம் ஞாயிறு அங்குரார்ப்பணம்

(வட்டுக்கோட்டை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஞாயிறுகாலை 10 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் வலிகாமம் மேற்கு பொறுப்பாளர் திரு. ஆஞ்சனேயரால் கூட்டப்பட்டபோது திரு.ஆர் ஐயர் தலைமை தாங்கினார்.

இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். அங்கு திரு ஆஞ்சநேயர் தமது கொள்கைகளை விளக்கிய பின் யுத்தம் ஒன்றையைப்பற்றி பொது மக்கள் இனியேல் அச்சம் கொள்ளத் தேவை இல்லை என்று கூறினார்.

எமக்கு ஜனநாயக முறையில் பிரசாரம் எல்லாம் அரசு தந்ததுடன் இந்திய எதிர்ப்பின்மூலம் நாம் கொண்ட தேசப்பற்று சிங்கள சகோதரர்கள் புரிந்து கொண்ட தன்மை பற்றி விளக்கப்பட்டது.

இவற்றின் மூலம் எமக்கென ஒரு வரலாறு அமையும் இது முடிந்த முடிவு என கூறினார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைப் பலப்படுத்தவே இன்று பொதுமக்களை அழைத்து கிராம சேவகர் பிரிவு தோறும் 20 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுள் ஏழு பேர் கொண்ட ''சிற்றூர் அவை'' செயற்குழுவை தெரிவு செய்து தொண்டு மனப்பான்மையுடனும் நாட்டுப்பற்றுடனும் சேவையாற்ற அங்கத்தவர்களை கேட்டுக் கொண்டார். (47)

# அன்னை பூபதியை தெய்வமாக வழிபட வேண்டும்

### கிளிநொச்சி வைபவத்தில் பேச்சு

(கிளிநொச்சி)

தேவலோகத்தவர்களைக் காப்பாற்றுவதற்காக நஞ்சை உண்டு நஞ்சுண்ட கண்டன் என்ற பெயரைப் பெற்றார்

கிளிநொச்சி நகர சிற்றூர் அவை செயலாளர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில். கனகபுரம்

# நெடுந்தீவு கூட்டுறவு ஊழியர் அடையாள வேலை நிறுத்தம்

### மக்கள் மடல்

ஆசிரியர்
ஈழநாதம்

பலாலி இராணுவ முகாமுக்குத் தெற்குப் பக்கமுள்ள 11 ஆம் வட்டாரமும் வசாவிளானில் உள்ள 1ஆம் வட்டாரமும் 2ஆம் வட்டாரத்தில் தோலகட்டிப் பகுதியும் 13ஆம் வட்டாரத்தில் தெற்குப்பகுதியும் ஸ்ரீலங்கா.இந்திய அமைதிப்படை இராணுவங்கள் வீடுகளை அழித்தும், கம நிலங்களை அழித்தும் இராணுவ பாதுகாப்பு நிலையங்களாக 11ஆம் வட்டாரத்தை முட்கம்பி வேலி போட்டு பொது மக்கள் உட்புகாத வாறுதடுத்துள்ளார்கள். வீடுகளுக்குகுண்டுகள்வைத்து முற்றாகஇடித்து தரைமட்டமாக்கியுள்ளார்கள். கிராம மக்களுக்கு அகதிகள் புனரமைச்சினால் வழங்கும் நிவாரணங்கள் இன்றுவரை கொடுபடாமலிருக்கிறது. மக்கள் கிராமசேவையாளரிடம் முறையிட்டால் வரும் எனக் கூறுகிறார்களே ஒழிய பெற்றுக் கொடுக்கிறார்களில்லை.

புனரமைச்சால் கொடுபடும் மீளக் குடியமர்வுப்பணம் ரூபா 2 000 தொழில்பாதிப்புப்பணம் ரூபா4,000/-இன்றுவரைஎத்தனையோ பேருக்கு கொடுபடவில்லை. சிறு குடிசைகளில் வாழ்ந்தோருக்குஅரசாங்கமும் பொது நிறுவனங்களும் சிறு உதவி புரிந்தார்கள். ஆனால் கல்வீடுகள் முற்றாக அழிக்கப் பட்டோருக்கு சிறு உதவியும் செய்யாதிருக்கின்றது.

சென்ற வன்செயல் காலங்களில் கணவன் மாரை இழந்த விதவைசட்குஇன்றுவரை அரசாங்கமோ பொது நிறுவனங்களோ எந்த வித உதவியும் செய்யாதிருக்கின்றது. இன்னமும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஸ்ரீலங்காஇராணுவம் பாதுகாப்பு அரண் அமைத்து இருப்பதால் கலாசாலைக்கு முன்பக்கமும், கிழக்குப் பக்கமும் உள்ளதம் வீடுகளிற்கு இக்கிராம மக்கள் சென்று குடியமர பயப்படுகின்றார்கள். கலாசாலையில் இருந்து இராணுவம் வெளியேறும் போதுதான் அம் மக்கள் தமது இல்லங்கட்கு சென்று குடியேறமுடியும் வலிவடக்கில் கஷ்டத்திற் குள்ளாக்கப்பட்ட கிராமங்கள் மேற்குறிப்பிட்டவையேயாகும். எனவே வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் அக்கறை எடுத்து புனரமைச்சுடன் தொடர்பு கொண்டு இவ்வூர்ஏழை மக்களை காப்பாற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

குரலெழுப்பி வருவதைக் காணும்போது வேதனையாக இருக்கிறது. ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பாமல், எதற்காக எமது விடுதலை இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது, எதற்காக நாம் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதப்போராட்டத்தை நடத்தினோம். இதற்கான காரணிகள் என்ன என்பதைச் சிங்கள மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த யதார்த்த நிலைகளை ஆராய்ந்து பார்த்து அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஆயுதப் பிரச்னை தானாகத் தீர்ந்துவிடும்"

இப்படித் தெளிவாகப் பதிலளித்திருக்கிறார் தலைவர் பிரபாகரன். இனியும் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்று எவரும் கேட்பதற்கு இடமில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு ஒரு கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தலைவர் பிரபாகரன் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கும் கிழக்கும் என்றுமே இணைந்துதானிருந்து வருகிறது. திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்கள் மூலமும் சிங்களப் பேரினவாதிகளின் செயல்களினாலும் அதைப் பிரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்பதே உண்மை!

ஜே ஆர். ஜெயவர்த்தனாவும் ராஜீவ்காந்தியும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கு இணைப்பை கருத்துக் கணிப்பு மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட எதுவுமே நடைமுறைப்படுத்தப்படாமல் அது செல்லுபடியற்றதாகிப் போயிருக்கிறது.

ஆயுதங்களைக் களைய வேண்டுமென்ற அம்சத்தை முதலில் செயல்படுத்த வேண்டுமென்று ஜே. ஆர். வற்புறுத்தியதன்விளைவு ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களை இழந்து இந்திய இராணுவம் திரும்பிச் சென்றிருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பின்னர் பார்க்கலாம் என்று அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம்போல் உருவாக்கப்பட்ட பொம்மை மாகாண சபையைக் காணவே இல்லை!

ஜே. ஆரும் - ராஜீவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை பிரபாகரனின் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை; இன்றைய இலங்கையின் ஜனாதிபதி பிரேமதாசாவும் ஏற்றுக்கொள்ளவில்லை!

இந்நிலையில் வடக்கு கிழக்கு இணைப்புக்குக் கருத்துக் கணிப்பு, ஆயுதக் களைவு என்றெல்லாம் பேசுவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

(கிளிநொச்சி)

தேவலோகத்தவர்களைக் காப்பாற்றுவதற்காக நஞ்சை உண்டு நஞ்சுண்ட கண்டன் என்ற பெயரைப் பெற்றார் சிவபெருமான்.

தமிழ் மக்களின் சுபீட்சத்திற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தவர் அன்னை பூபதி அவர்கள். தன்னை நம்பி வந்த தேவர்களை காப்பாற்ற சிவன் தன்னையே அழிக்க முற்பட்டார். அதுபோல சிவபெருமானை வணங்கி வரும் சைவமக்கள் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக தன்னையே அழித்துக் கொண்ட அன்னை பூபதியையும் ஒரு தெய்வமாக மதித்து வழிபடவேண்டும்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற உண்ணாவிரத நோன்பில் கலந்து கொண்டு பேசிய சமாதான நீதிவான் திரு. நாயகம் சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி நகர சிற்றூர் அவை செயலாளர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில். கனகபுரம் கிருஷ்ணபுரம், விநாயகபுரம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மேற்படி உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

திரு. நாயகம் சிற்றம்பலம் தொடர்ந்து பேசுகையில்,

உண்ணாவிரதம் இருப்பது சுலபமானகாரியம்அல்ல தம்பி திலீபனைப்போல, அன்னை பூபதியைப்போல சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பது என்பது கோடிக்கணக்கான மக்களில் ஒருவரால் கூட முடியாது.

தமிழீழ விடுதலைக்காகத் தம்மையே அழித்துக்கொண்ட திலீபன், அன்னை பூபதி ஆகியோரின் நினைவு நாளில் நாங்கள் நாயன்மார்களுக்கு குருபூசை செய்வதுபோன்று இவர்களுக்கும் குருபூசை செய்ய வேண்டும் என்றார்.

# பிரதி ஐ. ஜி. பி. மீது பொலிஸார் முறைப்பாடு

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ் மா அதிபர் தன்னை அவதூறாகப் பேசித் தாக்கியதாக போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ்காரர் ஒருவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவரை இம்முறைப்பாட்டை விசாரிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டைச் செய்துள்ளவர் கோட்டைப் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த ரிசேர்வ் பொலிஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

கோட்டைப் பகுதியில் தனியார் பஸ்ஸைத் தான் தடுத்து நிறுத்தியதாகவும், பஸ் சாரதியிடம் வாகனம் தொடர்பான தஸ்தாவேஜுகள் எதுவும் இல்லாத காரணத்தால், பஸ் சாரதியைத் தான் கைது செய்ததாகவும், சாரதியைக் கைது செய்தபிறகு பஸ் பிரதி பொலிஸ் மா அதிபருக்குச் சொந்தமானது என்றுதான் அறிந்தாரென்று போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

அவர் தன் முறைப்பாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பஸ்சாரதி விடுதலை செய்யப்பட்டார். தொடர்ந்தாற்போல் பொலிஸ் நிலையத்துக்கு வந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்னை அவதூறாகப் பேசி, நகரப் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தலைமைக் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு போகும் வழியில் காரில் வைத்து என்னைத் தாக்கினார்.

# நெடுந்தீவு கூட்டுறவு ஊழியர் அடையாள வேலை நிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தீர்மானப்படி கடந்த செவ்வாயன்று நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட சங்க முகாமையாளர் திரு. இரா. தர்மலிங்கத்தை மீண்டும் வேலையிற் சேர்த்துக் கொள்வது குறித்த கோரிக்கையை வேலை நிறுத்தத்தின் பிரதான கோரிக்கையாகக் கொண்டிருந்தனர்.

வேலைநிறுத்தத்தைவிலக்கி நியாயமான முடிவுகளை மேற்கொள்ள சங்கத்தின் தலைவர் திரு. த. அம்பலம் முன்வந்ததைத் தொடர்ந்து ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர்.

சங்க முகாமையாளரை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளத் தலைவர் சம்மதம் தெரிவித்ததாகத் தெரியவருகின்றது.

# பருத்தித்துறைமருதங்கேணி வீதி திருத்தப்படாததால் பஸ்விபத்து; மாணவிகாயம்!

(வடமராட்சி கிழக்கு)

வீதிச் சீர் கேட்டினால் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்த பஸ் பாடசாலைக்குச் சென்ற மாணவியை மோதியசம்பவம் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில், அம்பன் என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

பருத்தித்துறை -மருதங்கேணி வீதி கடந்தபல வருடங்களாக, மிகமோசமான நிலையில் பழுதடைந்த நிலையில் உள்ளது.

சம்பவம் நடந்த அன்று குன்றும் குழியுமாகவுள்ள அவ் வீதியில் ஓடிக் கொண்டிருந்தபருத்தித்துறை பஸ்ஸின் வில்லுத்தகடு உடைந்ததினால், பஸ் வீதிக்கு அருகிலுள்ள பள்ளத்தினுள் பாயும் போது, பாதசாரியாகச் சென்று கொண்டிருந்த மாணவியும் காயமடைந்து, மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

வீதி, அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள இவ் வீதியில்பஸ்சேவையினை நடத்த முடியாதென பருத்தித்துறை டிப்போ, சேவைகளை பல தடவைகள் நிறுத்த முற்பட்டபோதிலும், அப் பகுதி பொது ஸ்தாபனங்களின் வேண்டுகோளுக் கிணங்கவும், பொது மக்களின் நலன் கருதியுமே பஸ் சேவைகள் நடத்தப் பட்டு வருகின்றன என போக்கு வரத்துச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ் வீதியினைத் திருத்தியமைப்பதற்கு உலக வங்கி210 லட்சம்ரூபாவை(21மில்லியன் ஒன்றரைவருடங்களுக்கு முன்)னர் வழங்கியுள்ள போதிலும், இப்போதே சில இடங்களில் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு மிகமந்த கதியில் நடத்தப் பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது (36)

ரமைச்சுடன் தொடர்பு கொண்டு இவ்வூர்ஏழை மக்களை காப்பாற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

க.சிவபாதம்
செயலாளர்

# மனிதாபிமானம் வராதா?

அங்கவீனர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் போது ஒரு பகுதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/83 இல் கூறப்பட்டுள்ளது.

அனுராதபுரத்தில்பயிலுநர் ஆசிரிய நியமனத்தில் பதினேழு அங்கவீனர்கள் தெரிவு செய்யப்பட்டனர் ஆனால் யாழ்ப்பாணப் பகுதியில் எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவில்லை. அண்மைக்கால நடவடிக்கைகளினால் பலர் அங்கவீனர்களாக்கப் பட்டனர். எனவே அனுராதபுரம் கல்வி அதிகாரிகள் மனிதாபிமான உணர்வு எங்கள் யாழ்ப்பாண கல்வி அதிகாரிகளுக்கு இல்லையா

வியாபாரிமூலை
ப.அசோகன்

# காரைநகர் வீதி படுமோசம்

(தீவுப்பகுதி)

காரைநகரின் முக்கியமான பல பிரதான வீதிகள் இதுவரை திருத்தம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இங்குள்ள வீதிகள் பல போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சி அளிக்கின்றன. இவ்வீதிகளினூடாகத் துவிச்சக்கர வண்டிகள் கூட செல்லமுடியாத நிலைஉள்ளது உடனடியாக காரைநகர் வீதிகள் யாவும் மீள்திருத்தம்செய்யப்பட வேண்டுமென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள். (15)

ஈழநாதம்

# கல்விக்கொள்கை குறைபாடுகளால் இன்று பிரச்சனைகள் எழுந்துள்ளன

(பருத்தித்துறை)

''மனிதன் நாட்டுப்பற்று, சேவைமனப்பான்மைகளுடன் செயற்படவேண்டும். கடமைகளுடன் மாத்திரமன்றி தொண்டுகளும் புரிந்தும் வாழும் மனிதன் பிறப்பின் இலட்சியத்தையடைந்து வெற்றி பெற முடியும். ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய முக்கிய பங்கினை மறந்து விடக் கூடாது.''

மேற்கண்டவாறு, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் இவ் விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை தாங்கினார். உப வேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

கல்வியினால் மட்டும் மாணவர்கள் பூரணத்துவமான அறிவைப் பெற்றுவிட முடியாது. கல்வியுடன் விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் திகழும் போது தான் மாணவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய முழுமையான அறிவைப் பெற்று வாழ்க்கையில் வெற்றி பெற்று உயர்வடைய முடியும். விளையாட்டுத்துறையில் முன்னணியில் திகழ்பவர்கள் சர்வதேச ரீதியாகவும் பல சாதனைகளை நிலை நாட்டி புகழ் பெற முடியும்.

நாடெங்கிலும் சுமார் ஐந்து இலட்சம் மாணவர்கள் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இப் பரீட்சையில் சுமார் 1, 20.000 மாணவர்கள் சித்தியடைகின்றனர். 30,000 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறுகின்றனர். இதில் 6,000 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். எனவே க. பொ. த. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 1.2 வீதமான மாணவர்களே பல்கலைக்கழகத்திற்குச் செல்லக்கூடிய வாய்ப்பைப் பெறுவதைக் காணமுடிகிறது. இந்நிலை எமது கல்விக் கொள்கையில் உள்ள குறைபாட்டாலேயே உருவாகியுள்ளது. இன்றைய கல்விக் கொள்கையில் உள்ள குறைபாடுகள் பல்வேறு வகையான பிரச்சினைகளைச் சமுதாயத்தில் ஏற்படுத்தி மக்களையும் நாட்டையும் பாதாளத்திற்குத் தள்ளி விடுகின்றது என்றார்.

தொடர்ந்து பேசிய பேராசிரியர்; இன்றைய மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களை நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளாக உருவாக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு. இதில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மிக கண்ணியத்துடன் செயற்பட வேண்டும் மாணவர்கள் சமூக சேவை, சிரமதானம், சாரணியம் போன்றவைகளிலும் ஈடுபட்டுத் தமது எதிர்கால வாழ்வை வளம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று மரங்கள் அழிக்கப்படுவதன் அபாயத்தை அறியாமல் மரங்களை அழிக்கும் நடவடிக்கைகள் பெருமளவில் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு தொடர்ந்தும் மரங்கள் அழிக்கப்படுமேயானால் எமது எதிர்காலம் பயங்கர விளைவை எதிர்நோக்கும் பயங்கர நிலை ஏற்படும். எனவே மரங்களை நாட்டுவதில் அதிக கவனமெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்களும் மரங்களை நாட்டுதல், சுற்றாடல் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று பட்டம் பெறும் இன்றைய இளைய சமுதாயத்தினர் தாம் ஆற்ற வேண்டிய முக்கிய பணிகளை மறந்து தமக்கு கல்வி ஊட்டிய தனது சமுதாயத்தை மறந்து வெளிநாடுகளுக்குச் சென்று விடுவது மிகக் கவலைக்குரியதாகும். தமக்குக் கல்வி புகட்டி தமை அறிவாற்றல்களால் மேம்படுத்தி சிறந்த பிரஜைகளாக உருவாக்கிய தமது சமுதாயத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்பதை கல்வி கற்று பட்டம் பெற்று வெளியேறும் ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## முறைசாரா கல்வி வளர்ச்சிக்கு யுனிசெப் நிறுவனம் நிதி உதவி

(பண்டத்தரிப்பு)

கையெழுத்துப் பிரதிகளாக தயாரிக்கப்பட்டிருந்த 60 சுய தொழில் வழிகாட்டிகள் புத்தகங்களாக வெளியாகப் போகின்றன.

யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி திரு ஸ்கொல்லின் இதற்கான நிதி உதவியை வழங்கவுள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கும் தொழில் நுட்பக் கல்விக்கும் முறை சாராக் கல்வி வளத்திற்கும் பொறுப்பான கல்வியதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் எடுத்த நடவடிக்கையால் இது கிடைக்க உள்ளது.

அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வமாக வருகை தந்த யுனிசெப் நிறுவனப் பிரதிநிதியுடன் திரு சுப்பிரமணியம், தமது பிரிவு தயாரித்திருந்த கையெழுத்து பிரதிகள் புத்தகவடிவம் பெறுவதன் மூலம் படித்த வாலிபர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி தவிக்கும் நிலைமை சுய தொழிலை ஆரம்பித்து உழைத்து முன்னேற இப்புத்தகங்கள் அவர்களுக்குக் கை கொடுக்கும் எனவும் அவர் விளக்கிக் கூறினார்.

அப்புத்தகங்களில் சம்பந்தப்பட்ட தொழில் சார்ந்த தொழில் நுட்பங்களையும், உருவமைப்பு, கவர்ச்சி, நீண்ட பாவனை விடயங்கள் தொடர்பான விளக்கங்களையும், கொண்டிருப்பது பற்றித் தெளிவுபடுத்தியதால் திரு. ஸ்கொல்லினை மகிழ்ச்சியும் திருப்தியும் கொள்ள வைத்ததன் பயனாக ஒவ்வொரு கையெழுத்துப் பிரதியிலும் தலா 500 அச்சுப் பிரதிகளை அச்சிட வசதிகள் பிறந்துள்ளன.

திரு. ச. சுப்பிரமணியம் தொழில் நுட்பக் கல்வி அதிகாரியாகம் பதவியேற்றதிலிருந்து பல அரிய ஆக்கங்களை உருவாக்கிவருவது பாராட்டப்படுகின்றது.

இலங்கையில்முதல் முதலாக யாழ்ப்பாணத்தில் தொழிற் கல்வி மூலவள நிலையம் ஒன்

### உடுப்பிட்டி...:..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு 35.000 ரூபா பணம் பெறப்பட்டுள்ளது.

இதுபற்றி ஒப்பூதியப் பகுதி யாழ். மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் இக்குற்றத்தை செய்தவர்களே ஒப்புகொண்டுள்ளதாகவும் விரைவில் அத்தொகைப் பணத்தை மீள

### காணி.:--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வடபகுதி ரயில் சேவையை சீராக நடத்த அமைச்சு முடிவு

(கொழும்பு)

மீண்டும் போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. விஜயபால மெண்டிஸ் ரயில்வே பகுதியை மீண்டும் சீராக நடைபெற நடவடிக்கை எடுத்துள்ளார்.

ரயில்வே பகுதிக்கு பெரும் வருவாயை ஏற்படுத்தித் தரும் வடபகுதி ரயில் சேவைகளை சிறப்பாக நடாத்தவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

புதிய ரயில் என்ஜின்கள் வந்து சேர்ந்ததும், முன்னர் போல பகல் யாழ்தேவி, இன்ரர்சிற்றி என்பன சேவையிலீடுபடுத்தப்படும் என ரயில் சேவைப் பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தாா.

எதிர்வரும் புதுவருட தினத்தை முன்னிட்டு வடபகுதிக்கு விசேட ரயில் சேவைகள் நடைபெறவுள்ளன.

### பி எல் ஒ

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்தார். புதுடில்லியிலுள்ள முஸ்லிம் நாடுகளதும் அரபு நாடுகளதும் தூதுவர்களை சபாநாயகர் எம். எஸ். முஹமட் சந்தித்தார். இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவினை மூடி விடுவதற்கு ஜனாதிபதியும் இலங்கை மக்களுக்கு துணிச்சலோடும் எடுத்த புத்தி சாதுரியமான முடிவுக்கு அவர்கள் நன்றி தெரிவித்ததாக சபாநாயகர் குறிப்பிட்டார்.

### அமைதி-:--

(1-ஆம் பக்சத் தொடர்ச்சி)

சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஏ. கே. குப்தாவை கைது செய்யும்படி உயர்நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது.

### பஸ்நிலைய

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுத்து கொண்டர்கள் பஸ் நிலையவாசல்களில் நின்று உள்ளே செல்லும் வாகனங்களை தடை செய்து வருகின்றனர்.

தற்போது பஸ் நிலைய வாசலில் உள்ள அன்னாசிப் பழ வியாபாரிகளும் விரைவில் வேறிடத்துக்கு மாற்றப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் பஸ்நிலையம் ஒழுங்காக இருக்கும் எனவும் உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

### பிரதேச

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண மின்சாரம் பெறுபவர்கள் பாதிக்கப்படுவதுடன் மின்சாரப் பகுதிக்கு

## இறங்குதுறைகள் பழுது கடல் பயணிகள் பெரும் அவதி

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறையின் படகுத்துறை (இறங்கு துறை) கடல் அரிப்பால் சேதமடைந்துள்ளது. இதனால் இத்துறையில் படகுகளைஅணைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அனலைத்தீவு, எழுவைதீவு, காரைநகர் ஆகியவற்றிற்கு இதுவே முக்கிய இறங்குதுறையாக உள்ளது. மேலும் இந்த துறைமுகத்தில் உளள பிரயாணிகள் தங்கு மண்டபம் கடந்தகால வன்செயல்களினால் பாதிப்படைந்துள்ளது.

இந்த தங்கு மடத்தின் கடவைகள் முற்றாக சேதமடைந்த நிலையில் உள்ளது.

இத்துடன நாரந்தனைக் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள இறங்குதுறையும் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

இதனால் தீவுப்பகுதிகளுக்கு கடலில் பயணம் செய்யும் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

## தீவுகளுக்கு அதிசக்திவாய்ந்த வானொலி தொலைபேசி தேவை

(வேலணை)

தீவுப் பகுதி முழுவதிலும் உள்ள மக்களின் வசதி கருதி ஒவ்வொரு தீவுகளுக்கும் ஒவ்வொரு அதிசக்தி வாய்ந்த வானொலி தொலைபேசிக் கருவிகளை அமைத்துத் தருவதற்கு இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஊர்காற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். சீவரத்தினம் மகஜர் மூலம் கேட்டுள்ளார்.

கடலாலும் சூழப்பட்டிருக்கும் இத்தீவுப் பகுதிகள் போக்குவரத்தால் பல கஷ்டங்களை மக்கள் அனுபவித்து வருகின்றனர். இவர்களின் கஷ்டங்களை ஓரளவில் தீர்த்து வைக்கும் வகையில் தான் இவ்வாறான வானொலி தொலைபேசிக் கருவிகளை அமைத்துத் தருமாறு அவர் கேட்டுள்ளார்.

## கோவில்கள் புனரமைக்க மாகாணசபை நிதி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ ஆலயம், மூன்று இந்து ஆலயங்கள் புனரமைமபுக்கு வட-கிழக்கு மாகாண சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிவாரண நிதியின் முதற்கட்ட தொகையை உதவி கலாசார பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் ஆலய நிர்வாகிகளிடம் கையளித்தார்.

தன்னாமுனை புனித வளனார் தேவாலயம் 1 இல 10, 000ரூபா முதற்கட்டம ரூபா 25, 415

மட்டிக்கழி திரௌபதியம்மன் ஆலயம் - ரூபா 70 000 முதற்கட்டம் ரூபா 17 500.

நாவற்குடா பூமுத்துமாரியம்மன் ஆலயம்-ரூபா 1 இல. 10,000 முதற்கட்டம் ரூபா 25,415 என இத்தொகை அடங்கும். (37)

## சுத்திகரிப்பிற்கு நிதி இல்லை

யாழ் வைத்தியசாலையின் வடிகால் சுத்திகரிப்புத் திட்டத்திற்கு எதுவித நிதி உதவியும் இன்றி ஸ்தம்பித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வடிகாலைத் தற்போது புனருத்தாரணம் செய்ய யாழ். அரசாங்க அதிபர் ஒரு பகுதி நிதியையேனும் உதவி செய்வதற்கு ஒப்புக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை செய்வதற்கு உறுதி கூறியுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (லோ)

## புதியமுறை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பண், மணல், சீமெந்து ஆகிய பொருட்களின் கலவையைக் கொண்டு சீமெந்து கலவை தள அமைப்பாக இந்த இடம் செப்பனிடப்பட்டிருக்கிறது.

இது பற்றி வீதி அபிவிருத்தி அதிகார சபை வடமாகாண பணிப்பாளர் திரு சு. பாலேந்திரா தகவல் தருகையில், கற்களோ அல்லது கிறவல் மண்ணோ இல்லாத இப்பகுதியான இடங்களுக்கு பெருந் தொகைப் பணத்தைச் செல

## 24 தங்கக்கட்டிகள் கண்டுபிடிப்பு

சிங்கப்பூரிலிருந்து வந்த இலங்கைபிரஜை ஒருவரிடம் இருபத்திநான்கு தங்க கட்டி

… நிறுவனப் பிரதிநிதியுடன் திரு சுப்பிரமணியம், தமது பிரிவு தயாரித்திருந்த கையெழுத்து பிரதிகள் புத்தகவடிவம் பெறுவதன் மூலம் படித்த வாலிபர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி தவிக்கும் நிலைமைகளை ஓரளவு போக்க உதவும் எனச் சுட்டிக் காட்டினார்.

… காரியாகம் பதவியேற்றதிலிருந்து பல அரிய ஆக்கங்களை உருவாக்கிவருவது பாராட்டப்படுகின்றது.

இலங்கையில்முதல் முதலாக யாழ்ப்பாணத்தில் தொழிற் கல்வி மூலவள நிலையம் ஒன்றையமைக்கநடவடிக்கைஎடுத்தமை மிகச் சிறந்த ஒரு சாதனையாக அமைந்துள்ளது.

# காவலூர் கடற்பாதையில் பயணிகளுக்கு கட்டணமில்லை

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்குமிடையே புதிதாக சேவையாற்றத் தொடங்கிய கடற் பாதைச் சேவைக்கு பிரயாணம் செய்வோரிடமிருந்து கட்டணம் அறவிடப்படுவதில்லை.

இலவசமாகவே இப்பாதையில் பக்கள் பிரயாணம் செய்யக் கூடிய வசதிகளை அரசு செய்துள்ளது.

முன்னர் இருந்த பாதை மூலம் பிரயாணம் செய்தால் ஆயக் கட்டணமாக இருபத்தைந்து சதம் அறவிடப்பட்டது. தற்போது இச் சேவையினை வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்று நடாத்துகின்றது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு…-.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் இல்லாத நிலையில் 19-20 பாதையில் 4900 கிலோ மீற்றர் சேவையாற்றுகிறது.

யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், ஹட்டன், பொலநறுவ தூர இட பஸ்சேவை வழமைபோல் நடைபெறுகின்றன.

20 வரையிலான உள்ளூர் சேவைகள் போதிய பஸ் இல்லாத நிலையில் இடை நிறுத்தப்பட்டுள்ளது. பஸ்சேவை வசதியின்றி அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின்கீழ் 9 இலட்சம் ரூபாவழங்கப்பட்டது. ஆனால் 14 பஸ்கள் திருத்தம், டயர் போடுதலுக்கு அந்நிதி போதுமானதாக இருந்தது.

டயர் இன்றி 12 பஸ், என்ஜின் இன்றி 32 பஸ்கள் கியர் இன்றி 4 பஸ்கள் உள்ளன.

மாதாந்தம் 15 இலட்சம் ரூபா வருமானம். அதில் சம்பளம் - 8 இலட்சம் ரூபா, எரிபொருள் 7 இலட்சம் ரூபா என செலவு செய்யப்படுகின்றது என்றார். (37)

## நாசவேலை.. ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மிக வி ரவில் சில நி ந்தனைகளுடன் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், மற்றவர்கள், அவர்களுக் கெதிராகக் காத்திரமான சாட்சியம் இல்லாவிடில் பூரண விசாரணையின் பின் காலப்போக்கில் விடுவிக்கப்படுவார்கள்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிக்குகள் தொடர்பாகவும் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஏணஸ்ட் பெறேரா கட்டளை பிறப்பித்துள்ளார்.

## கட்டடத்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட இந்த ஊழியர்கள் தமது அவல நிலையையிட்டு விசனம் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சில ஊழியர்கள்திருக்கோணமலைக்குச் சென்று மாகாணப் பணிப்பாளரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபா வீதம் முற்பணமாக வழங்கப்பட்டதாம்.

பிரஸ்தாப ஊழியர்களுக்கு யார் கொடுப்பனவு செய்வது என்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் திணைக்கள அதிகாரிகள் தடுமாற்றம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (24)

…

இதுபற்றி ஓய்வூதியப் பகுதி யாழ். மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் இக்குற்றத்தை செய்தவர்களே ஒப்புகொண்டுள்ளதாகவும் விரைவில் அத்தொகைப் பணத்தை மீள அளிக்க ஒத்துக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இதனைத் தொடர்ந்து அனைத்து கிராமிய வங்கிகளுக்கும் தாம் ஒரு சுற்று நிருபம் அனுப்பி உள்ளதாகவும் அதில் ஓய்வூதியம் பெறுபவர் நேரே சென்று ஓய்வூதியத்தை பெறவேண்டும் அல்லது தத்தமது பகுதி கிராம சேவையாளரின் அத்தாட்சிப் பத்திரம் கொண்டு வர வேண்டும். அதுவரைக்கும் ஓய்வூதியம் வழங்கக் கூடாது என அதில் உத்தரவிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

## வடபகுதி..-.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து கொழும்பு மற்றும் தூர இடங்களுக்கான தபால்கள் இரவு ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போதே தரம்பிரிக்கப்பட்டு மறுநாள் சென்றடையும்.

அதேபோல கொழும்பிலிருந்து வரும் தபால்களும் இந்த மெயில் வண்டியில் தரம் பிரிக்கப்பட்டு மறுநாளே இங்கு கிடைக்கும்.

வவுனியா, மாங்குளம், கிளிநொச்சி போன்ற இடங்களுக்குரிய தபால் சேவைகளும் இதேபோல நடைபெறும்.

வடமராட்சிப் பகுதித் தபால்கள் கொடிகாமத்திலிருந்து முன்னர் போல பஸ் மூலம் அன்றைய தினமே சென்றடையும்.

…

என்பதை கல்வி ற்று பட்டம் பெற்று வெளியேறும் ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

## காணி.:--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறவிடப்பட்டு வருகிறது என்பதுகுறிப்பிடத்தக்கது. இதில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களும் புதிதாக பயன்பாட்டிற்கு உட்பட்ட காணிகளும் அடங்கவில்லை இதனால் புதிய மதிப்பீடுகளில் இவை சேர்த்துக் கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## எயிட்ஸ் நோயாளி

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து 11 நாட்கள் ஆஸ்பத்திரியிலிருந்த பிறகு, மகப்பேறு நேற்று முன்தினம் சம்பவித்துள்ளது.

தாயும் குழந்தையும் ஒரே அறையில் ஆஸ்பத்திரியில் இருந்த போதிலும் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதை மருத்துவர்கள் தடை செய்துள்ளனர்

சர்ச்சைக்குரிய இந்தநோயாளியை மகப்பேற்று வரையும் அவரது தாயும், கணவரும் பாத்திரம் பராமரித்து வந்தனர். முதலில் டாக்டர்கள் இவருக்கு சிகிச்சையளிப்பதற்கும் மறுத்துவந்தனர். ஆனால் இன்று டாக்டர் குழு ஒன்றும் குடும்பநலச் சேவை ஊழியர்களும் குழந்தையையும், தாயையும் கவனிப்பதற்கு முன்வந்துள்ளார்கள் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புதிய……

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சேவகர்களில் பலர் தமக்கு அலுவலகங்களைத் திறக்க வீடுகள் கிடைக்காமல் வீதிகளிலும், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் மக்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

கிராமசேவகர்களுக்கு அரசாங்கம் வழங்கும் அலுவலக வாடகைப் பணம் குறைவான தொகையாக இருப்பதால் அத்தொகைக்கு மேலாக வீடுகளை இதற்காக பெறமுடியாது இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

…தெரிவித்தார்.

## பிரதேச

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண மின்சாரம் பெறுபவர்கள் பாதிக்கப்படுவதுடன் மின்சாரப் பகுதிக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி வருவதாகவும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இல்லையேல் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## இன்று…

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவிருக்கும் ஆரம்ப வைபவத்தில் திரு. சிவகுருநாதர் தலைமையில் ஆலய தரும கர்த்தாக்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ள இருக்கின்றார்கள்.

இக் கருமபீடத்தில் சிறுவர் சேமிப்புக் கணக்குகள், சேமிப்புச் சான்றிதழ்கள் நிலையான வைப்புகள், விசாகார்ட் பத்திரங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

## லொறி……

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவில்லை.

காயங்களுக்குள்ளானவர்களில் கணவன் வவுனியா ஆஸ்பத்திரியிலும், மனைவி யாழ். வைத்தியசாலையிலும் உடனடிச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் யாழ். புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்தவர்கள் என வவுனியா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (தி)

## நீரழிவு…..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

இலங்கைக்குத் தேவையான இன்சுலின் டென்மார்க்கிலிருந்துதான் அதிகமாக இறக்குமதியாகிறது. சமீபகாலங்களில் டென்மார்க் குறணாரின் மதிப்பு அதிகரித்துள்ளதாக மருந்து இறக்குமதி செய்யும் வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

…

இது பற்றி வீதி அபிருத்தி அதிகார சபை வடமாகாண பணிப்பாளர் திரு சு. பாலேந்திரா தகவல் தருகையில், கற்களோ அல்லது கிறவல் மண்ணோ இல்லாத இப்பகுதியான இடங்களுக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்தே கற்கள் கொண்டு வரப்பட்டு வீதி செப்பனிடப்பட்டது. ஆனால் இந்தப் பரீட்சார்த்த புதிய முறை வெற்றியளிக்குமேயானால் குறைந்த செலவில் நீண்ட கால பாவனைக்குரிய வீதிகளை அமைத்துவிடலாம் என்றார். (19)

…றன. (லோ)

## 24 தங்கக்கட்டிகள் கண்டுபிடிப்பு

சிங்கப்பூரிலிருந்து வந்த இலங்கைபிரஜை ஒருவரிடம் இருபத்திநான்கு தங்க கட்டிகள் இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டன.

ஒன்பது லட்சம் ரூபா பெறுமதியான இந்தக்கட்டிகளை பறிமுதல் செய்த சுங்க அதிகாரிகள் அபராதப் பணம் செலுத்தாததால் இவரை கட்டுநாயக்கா பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.


## அறிவிப்பாளர்கள் தேவை

சுன்னாகத்தில் விரைவில் ஆரம்பமாகவிருக்கும் விளம்பர சேவைக்கு ஆண், பெண் அறிவிப்பாளர்கள் தேவை. குரல்வளமுடையோர் கல்வித்தகைமையுடன் 10 04. 90 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி

ஷண் அட்வடைசிங் சேவிஸஸ்

பஸ் நிலையம்

யாழ்ப்பாணம்.

(R/68)


## மரண அறிவித்தல்

### வே. சதாசிவம்

(முன்னை நாள் பரீட்சை உதவி ஆணையாளர்)

திரு. வே. சதாசிவம் (முன்னைநாள் உதவிப் பரீட்சை ஆணையாளர்) நேற்றுக் காலை (2. 04. 90) அவுஸ்திரேலியா சிட்னியில் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: து. சீனிவாசகம்

(B/554)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது